Sl. No. : 20000265

**LTGS/16**

பதிவு எண் | | | | | | | | | |

# 2016

# பொது அறிவு

# (பட்டப்படிப்பு தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு 100 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. உங்களுடைய பதிவு எண், தேர்வு தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றை விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விவரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
7. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
8. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
9. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
10. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
11. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

**SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS**

SEAL

[Turn over

SPACE FOR ROUGH WORK

1. The arrangement of Carbon atoms in diamond is

(A) Regular Hexagons

(B) Tetrahedral

(C) Pentagons

(D) Octahedral

வைரத்தில் உள்ள கார்பன் அணுக்களின் அமைப்பு

(A) ஒழுங்கான அறுகோண தட்டை அமைப்பு

(B) நான்முகி அமைப்பு

(C) ஐங்கோண அமைப்பு

(D) எண்முகி அமைப்பு

2. $$Ar-COOH \xrightarrow[4H]{LiAlH_4} ArCH_2OH$$

What is the type of above reaction?

(A) Oxidation

(B) Reduction

(C) Hydrolysis

(D) Dehydration

$$Ar-COOH \xrightarrow[4H]{LiAlH_4} ArCH_2OH$$

மேற்கண்ட வினையானது எந்த வகை வினையை சார்ந்தது?

(A) ஆக்ஸிஜனேற்றம்

(B) ஆக்சிஜன் ஒடுக்கம்

(C) நீராற்பகுப்பு

(D) நீர் நீக்கம்

3. Which one of the following relationship is correct?

(A) $pH = \frac{1}{[H^+]}$

(B) $pH = \log_{10}[H^+]$

(C) $\log_{10} pH = [H^+]$

(D) $pH = \log_{10}\frac{1}{[H^+]}$

பின்வரும் எந்த தொடர்பு சரியானது?

(A) $pH = \frac{1}{[H^+]}$

(B) $pH = \log_{10}[H^+]$

(C) $\log_{10} pH = [H^+]$

(D) $pH = \log_{10}\frac{1}{[H^+]}$

4. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Metabolism | 1. | Respiration |
| (b) | Oxidative phosphorylation | 2. | Photosynthesis |
| (c) | Auxins | 3. | Sum total of enzymatic reactions |
| (d) | Photolysis of water | 4. | Growth |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வளர்சிதை மாற்றம் | 1. | சுவாசம் |
| (b) | ஆக்ஸிஜனேற்ற பாஸ்பரீகரணம் | 2. | ஒளிச்சேர்க்கை |
| (c) | ஆக்ஸின்கள் | 3. | நொதிவினைகளின் கூட்டுத் தொகை |
| (d) | நீரின் ஒளிப்பிளத்தல் | 4. | வளர்ச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

5. Insulin is secreted by this cells of pancreas

(A) $\alpha$ -cells

(B) $\beta$ -cells

(C) $\gamma$ -cells

(D) T-cells

இன்சுலின் ஹார்மோன் கணையத்தில் காணப்படும் இவ்வகை செல்களால் சுரக்கப்படுகின்றது

(A) $\alpha$ -செல்கள்

(B) $\beta$ -செல்கள்

(C) $\gamma$ -செல்கள்

(D) T -செல்கள்

6. Mary Mallon who known as Typhoid Mary and her profession was a

(A) Fisher woman

(B) Store keeper

(C) Nurse

(D) Cook

மேரி மிலன் மேரி டைஃபாடு என்ற அழைப்பார்கள். அவருடைய தொழில் என்னவாகும்?

(A) மீனவர்

(B) அங்காடி அலுவலர்

(C) செவிலி தாய்

(D) சமையல்காரர்

7. Which among the following Indian states has the longest coast line?

(A) Tamil Nadu

(B) Gujarat

(C) Kerala

(D) Andhra Pradesh

மிக நீளமான கடற்கரை உள்ள இந்திய மாநிலம் எது?

(A) தமிழ்நாடு

(B) குஜராத்

(C) கேரளா

(D) ஆந்திர பிரதேசம்

8. The Bezbaruah committee deals with the concerns of the people of

(A) North-East living in other countries

(B) North-East living in their respective states

(C) North-East living in other parts of India

(D) North-East living in South India

பெஸ்பருவா குழு என்பது

(A) அயல்நாட்டில் வாழும் வட- கிழக்கு மாநிலத்தவர்கள் நலனை பேண

(B) வட கிழக்கு மாகாணத்திலேயே வாழும் வட- கிழக்கு மாநிலத்தவர்கள் நலனை பேண

(C) இந்தியாவில் பிற மாநிலங்களில் வாழும் வட - கிழக்கு மாநிலத்தவரின் நலனை பேண

(D) தென் இந்தியாவில் வாழும் வட - கிழக்கு மாநிலத்தவரின் நலம் காண

9. National voters Day is observed on

(A) 28$^{th}$ January

(B) 25$^{th}$ January

(C) 19$^{th}$ January

(D) 17$^{th}$ January

தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்படுவது

(A) 28 ஜனவரி

(B) 25 ஜனவரி

(C) 19 ஜனவரி

(D) 17 ஜனவரி

10. When was the National Youth Policy (NYP) introduced?

(A) 2011

(B) 2012

(C) 2013

(D) 2014

எப்பொழுது தேசிய இளைஞர் கொள்கை (NYP) வெளியிடப்பட்டது?

(A) 2011

(B) 2012

(C) 2013

(D) 2014

11. Who is the chair person of Governing Council of International fund for Agricultural development?

(A) Rahul Varma (B) Dinesh Sharma

(C) Dutt (D) Mithun Varma

வேளாண் முன்னேற்றத்திற்கான பன்னாட்டு நிதியின் ஆட்சிக் குழு தலைவர் யார்?

(A) ராகுல் வர்மா (B) தினேஷ் சர்மா

(C) தத் (D) மிதுன் வர்மா

12. The Book "Flood of fire" was written by

(A) Ashutosh (B) Abdul Majeed Malik

(C) Amitav Ghosh (D) Mohan Rao

"Flood of fire" என்ற நூலை எழுதியவர்

(A) அசுடோஷ் (B) அப்துல் மஜித் மாலிக்

(C) அமிதவ் கோஸ் (D) மோகன் ராவ்

13. The Climatic region of the Indian sub continents belongs to

(A) Equatorial climate change region

(B) Hot desert region

(C) Monsoon region

(D) Mediterranean region

இந்திய துணைக் கண்டம் எந்த கால நிலை வகைப்பாட்டில் அமையப் பெற்றுள்ளது?

(A) அயன மண்டல காலநிலை மாறுபாட்டு மண்டலம்

(B) வெப்ப பாலைவன மண்டலம்

(C) பருவகால மண்டலம்

(D) மத்திய தரை காலநிலை மண்டலம்

14. IAEA stands for

(A) International Atomic Energy Agency

(B) Indian Atomic Energy Agency

(C) International Agricultural Exchange Agency

(D) Indian Aeronautical Engineering Administration

IAEA என்பது இதைக் குறிப்பதாகும்

(A) International Atomic Energy Agency

(B) Indian Atomic Energy Agency

(C) International Agricultural Exchange Agency

(D) Indian Aeronautical Engineering Administration

15. Which one of the following pairs is correctly matched?

(A) Teak - Jammu and Kashmir

(B) Deodar - Madhya Pradesh

(C) Sal - Kerala

(D) Sundari - West Bengal

இவற்றுள் எந்த ஜோடி சரியாக பொருத்தப்பட்டுள்ளது?

(A) தேக்கு – ஜம்மு காஷ்மீர்

(B) தியோடர் – மத்திய பிரதேசம்

(C) சால் – கேரளா

(D) சுந்தரி – மேற்கு வங்காளம்

16. The major zonal soil type of peninsular India belongs to

(A) Red soils

(B) Yellow soils

(C) Black soils

(D) Older alluvium soils

இந்திய தீபகற்பத்தின் முக்கிய வகையான மண் இவ்வகையை சார்ந்தது

(A) சிவப்பு மண்

(B) மஞ்சள் மண்

(C) கருப்பு மண்

(D) பழைய வண்டல் மண்

17. ———— revolted in the Deccan against Shahjahan.

(A) Prince Pervez
(B) Shahryar
(C) Asaf Khan
(D) Khan Jahan Lodi

ஷாஜகானை எதிர்த்து தக்காணத்தில் புரட்சி செய்தவர்

(A) இளவரசர் பெர்வேஷ்
(B) சர்யர்
(C) ஆசப் கான்
(D) கான் ஜஹான் லோடி

18. What was the occasion for the Portuguese making over Bombay to the British?

(A) Growth of peaceful relations between the English and the Portuguese as a result of Portugals independence from the Spain
(B) The marriage of Charles II with the Portuguese princess Catherine of Braganza
(C) The defeat of Spanish Armada by the British in 1588
(D) The treaty of Madrid concluded in 1630

போர்த்துகீசியர் மும்பையை எந்த சூழலில் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்

(A) ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்ற போர்ச்சுகளுடன் பிரிட்டிஷ் சுமூக உறவை வளர்த்துக் கொள்வதற்காக
(B) சார்லஸ் II போர்த்துகீசிய இளவரசி கேத்தரின் ப்ரகன்சாவை திருமணம் செய்து கொண்டதற்காக
(C) பிரிட்டிஷ் 1588–ல் ஸ்பானிஸ் ஆர்மெடாவை வெற்றிக் கொண்டதற்காக
(D) 1630–ல் ஏற்பட்ட மாட்ரிட் ஒப்பந்தத்தின் படி

19. In which year, the work of the railway line from Madras to Arcot was commenced?

(A) 1853 A.D
(B) 1854 A.D
(C) 1856 A.D
(D) 1857 A.D

எந்த ஆண்டு, சென்னைக்கும் ஆற்காட்டிற்கும் இடையே இருப்பு பாதை போடும் பணி துவக்கப்பட்டது?

(A) கி.பி. 1853
(B) கி.பி. 1854
(C) கி.பி. 1856
(D) கி.பி. 1857

20. The President's rule in a state can be imposed initially for ———— after the parliamentary approval.

(A) Three months (B) Two years

(C) Six months (D) Nine months

ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஆரம்பத்தில் பாராளுமன்ற ஒப்புதலுடன் ———— காலத்திற்கு விதிக்கப்படலாம்.

(A) மூன்று மாதங்கள் (B) இரண்டு ஆண்டுகள்

(C) ஆறு மாதங்கள் (D) ஒன்பது மாதங்கள்

21. Which one of the following Tax was given a constitutional status in through 88th Amendment Act 2003?

(A) Income Tax (B) Service Tax

(C) Professional Tax (D) Corporation Tax

பின்வரும் வரிகளில் எந்த ஒன்று 88வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 2003–ன் மூலம் அரசியலமைப்பு அந்தஸ்தினைப் பெற்றது?

(A) வருமான வரி (B) சேவை வரி

(C) தொழில் வரி (D) நிறுவன வரி

22. Match the following and select the correct answer :

(a) Shah Nawaz committee 1. To identify the socially educationally backward class

(b) Kaka kalekar commission 2. To enquire into all excesses during emergency

(c) Shah commission 3. To investigate the demolition of Babri masjid

(d) Liberhan commission 4. To enquire the death of S.C. Bose

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

கீழ் வருபவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :

(a) ஷா நவாஸ் குழு 1. சமூக மற்றும் கல்வி ரீதியில் பின் தங்கியவர்களை கண்டறிதல்

(b) காகா கேல்கர் ஆணையம் 2. நெருக்கடி நிலையின் போது நடைபெற்ற அத்து மீறல்களை விசாரணை செய்ய

(c) ஷா ஆணையம் 3. பாபர் மசூதி இடிப்பினை விசாரணை செய்ய

(d) லிபரான் ஆணையம் 4. சுபாஷ் சந்திர போஸின் மரணத்தை விசாரணை செய்ய

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

23. Match List I with List II with regard to appointment power of the President :

| | List I | | List II |
|---|---|---|---|
| (a) | Members of Finance commission | 1. | Article 324 |
| (b) | Members of Election Commission | 2. | Article 338 |
| (c) | Members of Union Public Service Commission | 3. | Article 316 |
| (d) | Members of Scheduled Caste Commission | 4. | Article 280 |

Code :

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

குடியரசுத் தலைவரின் நியமன அதிகாரங்களை பற்றிய பட்டியல் I மற்றும் பட்டியல் II–ல் உள்ளவற்றை பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | நிதிக்குழுவின் உறுப்பினர்கள் | 1. | பிரிவு 324 |
| (b) | தேர்தல் குழுவின் உறுப்பினர்கள் | 2. | பிரிவு 338 |
| (c) | மத்திய பொதுப்பணி குழு உறுப்பினர்கள் | 3. | பிரிவு 316 |
| (d) | அட்டவணைப்பட்டியல் சாதிக்குழுவின் உறுப்பினர்கள் | 4. | பிரிவு 280 |

தொகுப்பு :

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

24. Who has the authority to decide a case of defection?

(A) The speaker or chairperson of the concerned house

(B) The party leader of the concerned house

(C) The election commission of India

(D) The party whip

கட்சித்தாவல் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளவர் யார்?

(A) சம்பந்தப்பட்ட அவையின் தலைவர் அல்லது சபாநாயகர்

(B) சம்பந்தப்பட்ட அவையில் உள்ள கட்சித்தலைவர்

(C) இந்திய தேர்தல் ஆணையம்

(D) கட்சி கொறடா

25. What is the percentage of FDI allowed in Pharma industry in India?

(A) 100% (B) 51%

(C) 60% (D) 48%

இந்தியாவில் மருந்து கம்பெனிக்குக் எவ்வளவு சதவிகிதம் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது?

(A) 100% (B) 51%

(C) 60% (D) 48%

26. Rangarajan committee relates to

(A) Banking reforms

(B) Share market reforms

(C) Disinvestment of public sector units

(D) Industrial Licence

ரங்கராஜன் குழு எவற்றுடன் தொடர்புடையது?

(A) வங்கி சீர்த்திருத்தம்

(B) பங்கு சந்தை சீர்த்திருத்தம்

(C) பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டை குறைத்தல்

(D) தொழில் அனுமதி

27. Which one is called a fourth sector?

(A) Agriculture sector (B) Information sector

(C) Industrial sector (D) Service sector

இவற்றில் நான்காவது துறை என எது அழைக்கப்படுகின்றது?

(A) விவசாயத் துறை (B) தகவல் துறை

(C) தொழில் துறை (D) சேவை துறை

28. Some formerly higher income and high growth states now weaken growth in the 11th Plan, most prominent of which are

(A) Karnataka and Kerala

(B) Tamilnadu and Andhra Pradesh

(C) Andhra Pradesh and Karnataka

(D) Karnataka and Tamilnadu

சில மாநிலங்கள் முன்பு அதிக வளர்ச்சி மற்றும் அதிக வருமானம் கொண்டதாக இருந்தன ஆனால் 11வது திட்ட காலத்தில் அதன் வளர்ச்சி குறைந்துள்ளன அவைகள்

(A) கர்நாடகா மற்றும் கேரளா

(B) தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம்

(C) ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா

(D) கர்நாடகா மற்றும் தமிழ்நாடு

29. Under whose recommendation Rural Credit of RBI was handed over to NABARD?

(A) CRAFICARD

(B) NARIMANN

(C) SCHELEGAL

(D) BENCH MANN

யாருடைய பரிந்துரையின் அடிப்படையில் ரிசர்வ் வங்கியின் ஊரகக் கடன்கள் அனைத்தும் நபார்ட் வங்கிக்கு மாற்றப்பட்டது?

(A) கிராபிக்கார்ட் (CRAFICARD)

(B) நாரிமன் (NARIMANN)

(C) ஸீலீகள் (SCHELEGAL)

(D) பென்ச்மென் (BENCH MANN)

30. The Second session of the Indian National Congress was held at

(A) Madras

(B) Calcutta

(C) Bombay

(D) Delhi

இந்திய தேசீய காங்கிரசின் இரண்டாவது மாநாடு நடைபெற்ற இடம்

(A) மெட்ராஸ்

(B) கல்கத்தா

(C) பம்பாய்

(D) டெல்லி

31. Kattapomman was hanged to death at Kayatharu in the year

(A) 1769 (B) 1779

(C) 1789 (D) 1799

கட்டபொம்மன் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்ட ஆண்டு

(A) 1769 (B) 1779

(C) 1789 (D) 1799

32. Subash Chandra Bose set up Indian National Army Head Quarters at

(A) Nepal and Rangoon (B) Rangoon and Singapore

(C) Singapore and Tibet (D) Tokyo and Nepal

சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய ராணுவத்தின் தலைமையிடங்களை அமைத்தது

(A) நேபாளம் மற்றும் ரங்கூன் (B) ரங்கூன் மற்றும் சிங்கப்பூர்

(C) சிங்கப்பூர் மற்றும் திபெத் (D) டோக்கியோ மற்றும் நேபாளம்

33. Which of the following party was in power in the UK when India got Independence?

(A) Conservative party (B) Socialist party

(C) Labour party (D) Liberal party

இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது கீழ்க்கண்ட அரசியல் கட்சிகளில் எந்தக் கட்சி இங்கிலாந்தில் ஆட்சியில் இருந்தது?

(A) கன்சர்வேடிவ் கட்சி (B) சோஷியலிஸ்ட் கட்சி

(C) லேபர் கட்சி (D) லிபரல் கட்சி

34. If 30% of $a = 60$ then find $a$

(A) 200

(B) 50

(C) 250

(D) 100

$a$-ன் 30% என்பது 60 எனில் $a$-ன் மதிப்பு

(A) 200

(B) 50

(C) 250

(D) 100

35. $2\frac{3}{4} \div 2\frac{2}{3} \div 1\frac{1}{12} = ?$

(A) $\frac{33}{104}$

(B) $\frac{66}{104}$

(C) $\frac{99}{104}$

(D) 1

$2\frac{3}{4} \div 2\frac{2}{3} \div 1\frac{1}{12}$-ன் மதிப்பு?

(A) $\frac{33}{104}$

(B) $\frac{66}{104}$

(C) $\frac{99}{104}$

(D) 1

36. $A$ can do a piece of work in 10 days and $B$ can do the same work in 12 days. How long will they take to finish the work, if both work together?

(A) 6 days

(B) $5\frac{5}{11}$ days

(C) 7 days

(D) 8 days

$A$ என்பவர் ஒரு வேலையை 10 நாட்களில் செய்கிறார். அதே வேலையை $B$ என்பவர் 12 நாட்களில் செய்கிறார். இருவரும் சேர்ந்து அதே வேலையை செய்தால் எத்தனை நாட்களில் முடிப்பர்?

(A) 6 நாட்கள்

(B) $5\frac{5}{11}$ நாட்கள்

(C) 7 நாட்கள்

(D) 8 நாட்கள்

37. If the sum of a rational number and its reciprocal is $\frac{13}{6}$ then the number is

(A) $\frac{2}{3}$ or $\frac{3}{2}$

(B) $\frac{1}{2}$ or 2

(C) $\frac{5}{2}$ or $\frac{2}{5}$

(D) $\frac{2}{7}$ or $\frac{7}{2}$

ஒரு பகு எண்ணும் அதனுடைய தலைகீழியும் கூட்டிக் கிடைக்கும் மதிப்பு $\frac{13}{6}$ எனில் அவ்வெண்ணானது

(A) $\frac{2}{3}$ அல்லது $\frac{3}{2}$

(B) $\frac{1}{2}$ அல்லது 2

(C) $\frac{5}{2}$ அல்லது $\frac{2}{5}$

(D) $\frac{2}{7}$ அல்லது $\frac{7}{2}$

38. Complete the series.

AZ, GT, MN, __________, YB

(A) SK

(B) JH

(C) SH

(D) TS

AZ, GT, MN, __________, YB என்ற வரிசையை நிறைவு செய்.

(A) SK

(B) JH

(C) SH

(D) TS

39. The ratio of two numbers is 4 : 7. On subtracting 10 from each number, the ratio becomes 1 : 2, then the greater number is

(A) 40

(B) 70

(C) 80

(D) 100

இரு எண்களின் விகிதம் 4 : 7. ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 10-ஐக் கழித்தால் கிடைக்கும் விகிதம் 1 : 2 எனில் இரு எண்களில் பெரிய எண் எது?

(A) 40

(B) 70

(C) 80

(D) 100

40. The metallic sphere of radius 12 cm is melted into three smaller spheres. If the radii of two smaller spheres are 6 cm and 8 cm, the radius of the third sphere is

(A) 14 cm (B) 16 cm

(C) 10 cm (D) 12 cm

12 செ.மீ. ஆரமுள்ள ஒரு கோள குண்டானது உருக்கி மூன்று சிறு கோளங்களாக மாற்றப்படுகிறது. முதல் இரண்டு கோளங்களின் ஆரங்கள் 6 செ.மீ. மற்றும் 8 செ.மீ., மூன்றாவது கோளத்தின் ஆரம்

(A) 14 செ.மீ. (B) 16 செ.மீ.

(C) 10 செ.மீ. (D) 12 செ.மீ.

41. A square is inscribed in a circle whose radius is 4 cm. The area of the portion between the circle and the square is

(A) $16\pi - 32$ cm$^2$ (B) $32\pi - 27$ cm$^2$

(C) $20\pi + 11$ cm$^2$ (D) $12\pi - 4$ cm$^2$

4 செ.மீ. ஆரம் கொண்ட ஒரு வட்டத்திற்குள் ஒரு சதுரம் வரையப்படுகிறதெனில் வட்டத்திற்கும் சதுரத்திற்கும் இடைப்பட்ட பகுதியின் பரப்பு

(A) $16\pi - 32$ செ.மீ.$^2$ (B) $32\pi - 27$ செ.மீ.$^2$

(C) $20\pi + 11$ செ.மீ.$^2$ (D) $12\pi - 4$ செ.மீ.$^2$

42. The perimeter of one face of a cube is 20 cm. Its volume must be

(A) 215 cm$^3$ (B) 200 cm$^3$

(C) 125 cm$^3$ (D) 8000 cm$^3$

ஒரு கனச் சதுரத்தின் ஒரு பக்கத்தினுடைய சுற்றளவு 20 செ.மீ. எனில் அதன் கன அளவு

(A) 215 செ.மீ.$^3$ (B) 200 செ.மீ.$^3$

(C) 125 செ.மீ.$^3$ (D) 8000 செ.மீ.$^3$

43. $2^2+4^2+6^2+\cdots+20^2 =$ ______

(A) 1155

(B) 1540

(C) 2310

(D) $385 \times 385$

$2^2+4^2+6^2+\cdots+20^2 =$ ______

(A) 1155

(B) 1540

(C) 2310

(D) $385 \times 385$

44. In how many years will a sum of money double itself at 12% per annum for simple interest.

(A) 6 years 9 months

(B) 7 years 6 months

(C) 8 years 3 months

(D) 8 years 4 months

12% தனிவட்டி வீதத்தில் தொகை இரட்டிப்பாக மாறுவதற்குரிய ஆண்டுகள் எத்தனை?

(A) 6 ஆண்டுகள் 9 மாதங்கள்

(B) 7 ஆண்டுகள் 6 மாதங்கள்

(C) 8 ஆண்டுகள் 3 மாதங்கள்

(D) 8 ஆண்டுகள் 4 மாதங்கள்

45. H.C.F. of $\frac{81}{576}, \frac{729}{288}, \frac{6561}{144}$

(A) $\frac{81}{576}$

(B) $\frac{81}{144}$

(C) $\frac{81}{288}$

(D) $\frac{81}{72}$

மீ.பெ.வ. காண் : $\frac{81}{576}, \frac{729}{288}, \frac{6561}{144}$

(A) $\frac{81}{576}$

(B) $\frac{81}{144}$

(C) $\frac{81}{288}$

(D) $\frac{81}{72}$

46. The International Decade for Natural Disaster Reduction (IDNDR) declared in the decade

(A) 1980–1990 (B) 1990–2000

(C) 2000–2010 (D) 2010–2020

சர்வதேச இயற்கை பேரிடர் குறைத்தலுக்கான பத்தாண்டு திட்டம் அறிவிக்கப்பட்ட பத்தாண்டு ———— ஆகும்.

(A) 1980–1990 (B) 1990–2000

(C) 2000–2010 (D) 2010–2020

47. As per the IUCN Red list 2004, how many plant species were extinct in India?

(A) 87 (B) 89

(C) 97 (D) 99

IUCN சிவப்பு புத்தகம் புள்ளி விவரம் 2004 படி, எத்தனை வகையான மரங்கள் இந்தியாவில் அழிந்துள்ளது?

(A) 87 (B) 89

(C) 97 (D) 99

48. Bar Code store information using :

(A) Punch holes (B) Thick and thin lines

(C) Magnetized spots (D) Bits

பட்டை குறியீட்டில் தகவல்களை சேமித்திட பயன்படுத்துவது

(A) நுண் துளைகள் (B) நெருக்கமான மற்றும் நெருக்கமற்ற கோடுகள்

(C) காந்த புள்ளிகள் (D) துண்மிகள்

49. Who is proved experimentally the existence of the nutrino?

(A) Enrico Fermi

(B) Richard P. Feynman

(C) Rutherford

(D) Clyde L. Cowan and Frederic Reines

நியூட்ரினோவை செயல்முறையில் கண்டுபிடித்து நிரூபித்தவர் யார்?

(A) என்ரிக்கோ ஃபெர்மி

(B) ரிச்சர்ட் P. ஃபெய்ன்மேன்

(C) ரூதர்ஃபோர்டு

(D) கிளைடு L. கோவன் மற்றும் ஃபிரடரிக் ரெய்ன்ஸ்

50. What is the principle involved in Radar?

(A) Radio echoes

(B) Radio reflection

(C) Radio refraction

(D) Radio scattering

ரேடாரின் தத்துவம் என்ன?

(A) ரேடியோ எதிரொளிப்பு

(B) ரேடியோ பிரதிபலித்தல்

(C) ரேடியோ விலகல்

(D) ரேடியோ சிதறல்

51. The radius of the atomic nucleus is

(A) $10^{-3}$ cm

(B) $10^{-10}$ cm

(C) $10^{-13}$ cm

(D) $10^{-15}$ cm

அணுக்கரு ஆரத்தின் மதிப்பு

(A) $10^{-3}$ செ.மீ.

(B) $10^{-10}$ செ.மீ.

(C) $10^{-13}$ செ.மீ.

(D) $10^{-15}$ செ.மீ.

52. Which of the following is an example of condensation polymer?

(A) Nylon 6, 6
(B) Teflon
(C) Polypropylene
(D) Orlon

கீழ்கண்டவற்றுள் எவை குறுக்கப் பலபடிக்கு உதாரணம் ஆகும்?

(A) நைலான் 6, 6
(B) டெஃப்லான்
(C) பாலிபுரோப்பலின்
(D) ஆர்லான்

53. Which among the following angiospermic character is most important to differentiate from Gymnosperms?

(A) Presence of vessels in xylem
(B) Presence of companion cells in phloem
(C) Seeds enclosed in fruit
(D) Flowers with attractive petals

கீழ்வருவனவற்றுள் எந்த ஆஞ்சியோஸ்பெர்மின் குணம் ஜிம்னோஸ்பெர்மிலிருந்து வேறுபட முக்கிய பங்கு வகிக்கிறது?

(A) சைலத்தில் உள்ள குழாய்கள்
(B) ஃபுளோயத்தில் உள்ள துணைச் செல்கள்
(C) விதைகள் கனிகளால் மூடப்பட்டிருக்கும்
(D) அழகான அல்லிகளைக் கொண்ட மலர்கள்

54. What is the name of the inner boundary membrane for the cytoplasm of a plant cell?

(A) Plasma membrane
(B) Tonoplast
(C) Plasma desmata
(D) Nuclear membrane

தாவர செல்லின் சைட்டோபிளாசத்தின் உட்புறம் எந்த சவ்வு அல்லது உறையால் முடிவுற்றிருக்கிறது?

(A) பிளாஸ்மா சவ்வு
(B) டோனோபிளாஸ்ட்
(C) பிளாஸ்மா டெஸ்மேட்டா
(D) நியூக்ளியர் உறை

55. Which one of the following digestive enzymes is present in the saliva?

(A) Amylase
(B) Lipase
(C) Ptyalin
(D) Trypsin

பின்வரும் செரிமான நொதிகளில் உமிழ்நீரில் காணப்படுவது எது?

(A) அமைலேஸ்
(B) லிப்பேஸ்
(C) டையலின்
(D) ட்ரிப்ஸின்

56. 'Light rays that pass near the sun will be deflected towards it'. This effect is known as

(A) Einstein effect
(B) Doppler effect
(C) Lorentz effect
(D) Fitzgerald effect

'சூரியனின் அருகில் செல்லும் ஒளிக்கற்றைகள் அதனை நோக்கி விலக்கமடையும்' - இந்த விளைவின் பெயர்

(A) ஐன்ஸ்டீன் விளைவு
(B) டாப்ளர் விளைவு
(C) லாரண்ட்ஸ் விளைவு
(D) ஃபிட்ஸ் ஜெரால்ட் விளைவு

57. Middle piece of a sperm contains

(A) Nucleus and Mitochondria
(B) Centriole and Mitochondria
(C) Nucleus and Centriole
(D) Mitochondria only

ஒரு விந்துவின் மத்திய பகுதியில் உள்ளது

(A) நியூக்ளியஸ் மற்றும் மைட்டோகாண்ட்ரியா
(B) சென்ட்ரியோல் மற்றும் மைட்டோகாண்ட்ரியா
(C) நியூக்ளியஸ் மற்றும் சென்ட்ரியோல்
(D) மைட்டோகாண்ட்ரியா மட்டும்

58. AMCA stands for

(A) Advanced Missile Combat Aircraft

(B) Anti-Missile Combat Aircraft

(C) Advanced Medium Combat Aircraft

(D) Anti-Missile Controlling Aircraft

AMCA என்பது எதைக் குறிக்கிறது?

(A) உயர்ரக ஏவுகணை எதிர்ப்பு விமானம்

(B) ஏவுகணைக்கு எதிரான எதிர்ப்பு விமானம்

(C) உயர்ரக நடுத்தர எதிர்ப்பு விமானம்

(D) ஏவுகணைக்கு எதிரான கட்டுபடுத்தும் விமானம்

59. The Periyar Tiger Reserve received the National Tiger conservation award on January 20, 2015. This Reserve is located in

(A) Kerala

(B) Karnataka

(C) Tamil Nadu

(D) Gujarat

ஜனவரி 20, 2015 அன்று பெரியார் புலிகள் சரணாலயம் தேசிய புலிகள் பாதுகாப்பிற்கான விருதைப் பெற்றது. இச்சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?

(A) கேரளா

(B) கர்நாடகா

(C) தமிழ்நாடு

(D) குஜராத்

60. How many foreign satellites are successfully put into orbit by India's PSLVC-23?

(A) Two

(B) Three

(C) Four

(D) Five

இந்திய PSLVC-23 விண்கலம் எத்தனை அந்நிய செயற்கை கோள்களை சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக ஏவியது?

(A) இரண்டு

(B) மூன்று

(C) நான்கு

(D) ஐந்து

61. Who is the 43rd Chief Justice of India?

(A) H.L. Dattu (B) T.S. Thakur

(C) R.K. Mathur (D) A.K. Mukerji

இந்தியாவின் 43–வது தலைமை நீதிபதி யார்?

(A) H.L. தத்து (B) T.S. தாக்கூர்

(C) R.K. மாத்தூர் (D) A.K. முகர்ஜி

62. Who won Dada Saheb Phalke award in 2016?

(A) Shashi Kapoor (B) Gulzar

(C) Manoj Kumar (D) K. Balachander

2016–க்கான தாதா சாகிப் பால்கே விருது பெற்றவர் யார்?

(A) சசி கபூர் (B) குல்சார்

(C) மனோஜ் குமார் (D) K. பாலசந்தர்

63. Who won Sahitya Academy award in 2015 for the prose "Ilakkya Chuvadugal" in Tamil?

(A) V. Shanmugam (B) A. Madhavan

(C) A. Malar Mannan (D) T. Ramakrishnan

2015–ல் "இலக்கிய சுவடுகள்" என்ற தமிழ் உரைநடைக்காக சாகித்ய அகாடெமி விருது பெற்றவர் யார்?

(A) V. சண்முகம் (B) A. மாதவன்

(C) A. மலர் மன்னன் (D) T. இராமகிருஷ்ணன்

64. Match the following :

(a) Rains throughout the year — 1. 16°– 20°

(b) Summer Rains; winter dry — 2. 20° – 30°

(c) Light summer rains — 3. 7°N to 7°S

(d) All seasons dry, minimum rains — 4. 7° –16°

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

பொருத்துக :

(a) ஆண்டு முழுவதும் மழை — 1. 16°– 20°

(b) கோடை மழை; வறண்ட குளிர்காலம் — 2. 20° – 30°

(c) மிதமான கோடை மழை — 3. 7°N to 7°S

(d) அனைத்து பருவங்கள் உலர்ந்த, குறைந்தபட்ச மழை — 4. 7° –16°

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

65. The diameter of solar system is about

(A) 1143 Crore Kilometers
(B) 1163 Crore Kilometers
(C) 1153 Crore Kilometers
(D) 1173 Crore Kilometers

சூரிய குடும்பத்தின் விட்டம் எவ்வளவு?

(A) 1143 கோடி கிலோமீட்டர்கள்
(B) 1163 கோடி கிலோமீட்டர்கள்
(C) 1153 கோடி கிலோமீட்டர்கள்
(D) 1173 கோடி கிலோமீட்டர்கள்

66. The word 'Sangam' in the early History of South India denotes

(A) Academy of learned men

(B) Assembly of poets

(C) Collection of scholarly works

(D) Scholarly debates

தென்னிந்திய வரலாற்றில் 'சங்கம்' எனும் சொல் எதனை குறிக்கிறது?

(A) கல்வியாளர்களின் மையம் (இணையம்)

(B) கவிஞர்களின் மன்றம்

(C) அறிவாளர்களின் படைப்புகளை சேகரித்தல்

(D) அறிவாளர்களின் விவாத மையம்

67. ———— was the chief architect of the state during the regime of Firoz Tughlak.

(A) Abdul Haq

(B) Malik Ghazi Shahna

(C) Shams-i-siraj

(D) Haji Illiyas

பெரோஷ் துக்ளக் ஆட்சியில் தலைமை கட்டிடக்கலை வல்லுனராக ———— இருந்தார்.

(A) அப்துல் ஹக்

(B) மாலிக் ஹாஜி சானா

(C) சாம்ஸ் –இ–சிராஜ்

(D) ஹாஜி இலியாஸ்

68. In whose regime Nicolo Conti, an Italian visited Vijayanagar Empire?

(A) Harihara I

(B) Harihara II

(C) Devaraya I

(D) Devaraya II

யாருடைய ஆட்சி காலத்தில் இத்தாலிய பயணி நிக்கோலோ காண்டி விஜயநகர பேரரசிற்கு விஜயம் செய்தார்?

(A) முதலாம் ஹரிஹரர்

(B) இரண்டாம் ஹரிஹரர்

(C) முதலாம் தேவராயர்

(D) இரண்டாம் தேவராயர்

69. Consider the following statements and choose the correct answer :

I. The Ramakrishna mission has drawn all principles and ideals from the life and teachings of Swami Ramakrishna.

II. Swami Ramakrishna founded the Ramakrishna mission.

(A) Only I is true
(B) Only II is true
(C) Both I and II are true
(D) Both I and II are false

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களில் சரியானவற்றை தேர்ந்தெடு

I. சுவாமி இராமகிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் போதனைகளிலிருந்து இராமகிருஷ்ண மடமானது கொள்கைகள் மற்றும் கருத்துக்களை பெற்றது.

II. சுவாமி இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ண மடத்தை தோற்றுவித்தவர் ஆவார்

(A) I மட்டுமே சரியாகும்
(B) II மட்டுமே சரியாகும்
(C) I மற்றும் IIம் சரியாகும்
(D) I மற்றும் IIம் தவறாகும்

70. Who issued the historically important Non-Brahmin manifesto in 1916?

(A) Thiagaraja chettiar
(B) Natesa Mudaliar
(C) Sankaran Nair
(D) E.V. Ramasamy Naidu

வரலாற்றுச் சிறப்புமிக்க பிராமணரல்லாதார் பிரகடனத்தை 1916 ல் வெளியிட்டவர் யார்?

(A) தியாகராஜ செட்டியார்
(B) நடேச முதலியார்
(C) சங்கரன் நாயர்
(D) ஈ.வெ. ராமசாமி நாயுடு

71. The chief of the Lok Sabha (House of People) Secretariat is

(A) Speaker of the House of people
(B) Secretary of the House of People
(C) Secretary General of the House of people
(D) Deputy speaker of the House of people

லோக்சபா (மக்களவை) செயலகத்தின் தலைவர்

(A) மக்களவை சபாநாயகர்
(B) மக்களவை செயலர்
(C) மக்களவை பொதுச் செயலர்
(D) மக்களவை துணை சபாநாயகர்

72. In which year the National Commission for SC/STs was bifurcated into two commissions namely National Commission for SCs and National Commission for STs?

(A) 1960
(B) 1970
(C) 1980
(D) 1990

எந்த ஆண்டு தேசிய அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், இரண்டாக பிரிக்கப்பட்டது?

(A) 1960
(B) 1970
(C) 1980
(D) 1990

73. Which of the following Article says that the council of states shall not be subject to dissolution?

(A) Article 83
(B) Article 84
(C) Article 90
(D) Article 91

பின்வருவனவற்றுள் எந்த விதி மாநிலங்களவை கலைக்கப்பட கூடாது என்று கூறுகிறது?

(A) விதி 83
(B) விதி 84
(C) விதி 90
(D) விதி 91

74. Which one of the following matching is not correct?

(A) Held – Model of democracy
(B) Machpherson – Democratic participation
(C) Lively – Democracy
(D) Schumpeter – Capitalism, Socialism and Democracy

கீழ்வருபவனவற்றில் எது பொருத்தம் இல்லை?

(A) ஹெல்ட் – ஜனநாயகத்தின் மாதிரிகள்
(B) மேக்பர்சன் – ஜனநாயக பங்களிப்பு
(C) லிவ்லி – ஜனநாயகம்
(D) ஸ்கம்பீட்டர் – முதலாளித்துவம், சமதர்மம் மற்றும் மக்களாட்சி

75. List out the chairman of the election commission in the chronological order :

1. T.S. Krishna Murthy
2. T.N. Seshan
3. Sukumar Sen
4. Smt. V.S. Rama Devi

(A) 3 – 4 – 2 – 1
(B) 4 – 3 – 2 – 1
(C) 4 – 3 – 1 – 2
(D) 4 – 1 – 2 – 3

தேர்தல் குழுவின் தலைவர்களை வரிசைப்பிரகாரம் பட்டியலிடுக :

1. டி.எஸ். கிருஷ்ண மூர்த்தி
2. டி.என். சேஷன்
3. சுகுமார் சென்
4. திருமதி. வி.எஸ். ரமா தேவி

(A) 3 – 4 – 2 – 1
(B) 4 – 3 – 2 – 1
(C) 4 – 3 – 1 – 2
(D) 4 – 1 – 2 – 3

76. Who formed the first communist party outside Russia in Mexico?

(A) Karl Marx
(B) M.N. Roy
(C) Lenin
(D) Stalin

ரஷ்யாவை தவிர்த்து மெக்சிகோவில் முதன்முதலாக கம்யூனிச கட்சியை ஆரம்பித்தவர் யார்?

(A) காரல் மார்க்ஸ்
(B) எம்.என். ராய்
(C) லெனின்
(D) ஸ்டாலின்

77. Which of the following Articles relate to the relationship of the President and the Council of Ministers?

(A) 71, 75 and 78
(B) 72, 75 and 78
(C) 73, 75 and 78
(D) 74, 75 and 78

குடியரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவை குழுக்களுக்கும் இடையே உள்ள உறவுகளை எந்த பிரிவுகள் விவரிக்கின்றன?

(A) 71, 75 மற்றும் 78
(B) 72, 75 மற்றும் 78
(C) 73, 75 மற்றும் 78
(D) 74, 75 மற்றும் 78

78. Which country has now emerged as the largest sugar producing country in the world?

(A) Russia
(B) America
(C) India
(D) Brazil

உலகில் தற்பொழுது அதிக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாக எது தோன்றியுள்ளது?

(A) ருஷ்யா
(B) அமெரிக்கா
(C) இந்தியா
(D) பிரேசில்

79. It was mentioned under which plan "the basic goal is a rapid increase in the standard of living of the people" and "again emphasis is placed on the common man, the weaker sections and the less privileged"

(A) First Five Year Plan
(B) Third Five Year Plan
(C) Fourth Five Year Plan
(D) Sixth Five Year Plan

"மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகமாக உயர்த்துவது தான் அடிப்படை நோக்கம்" மற்றும் மேலும் "இவை சாதாரண பொது மக்கள், பலவீனமான வகுப்பினர் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படாத மக்களுக்கானது என வலியுறுத்தியது" இவை எந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) முதல் ஐந்தாண்டு திட்டம்
(B) மூன்றாவது ஐந்தாண்டு திட்டம்
(C) நான்காவது ஐந்தாண்டு திட்டம்
(D) ஆறாவது ஐந்தாண்டு திட்டம்

80. The first three plans talked of the setting up of a

(A) Mixed economic system
(B) Socialise pattern of society
(C) Establishment of a social and economic democracy
(D) Both (B) and (C)

முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் எவற்றின் ஒன்றை நிறுவுவது என பேசப்பட்டன

(A) கலப்பு பொருளாதார முறை
(B) சமதர்ம சமுதாயத்தை நிறுவுவது
(C) சமூக மற்றும் பொருளாதார மக்களாட்சியை நிறுவுவது
(D) (B) மற்றும் (C) இரண்டும்

81. Match List I with List II and answer through the codes given below :

| List I | | List II | |
|---|---|---|---|
| (a) | 1911 | 1. | Poona pact |
| (b) | 1916 | 2. | Cripps Mission |
| (c) | 1932 | 3. | Partition of Bengal annulled |
| (d) | 1942 | 4. | Lucknow pact |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

பட்டியல் I-ல் உள்ளவற்றை பட்டியல் II-டுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் பொருத்துக :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | 1911 | 1. | பூனா ஒப்பந்தம் |
| (b) | 1916 | 2. | கிரிப்ஸ் தூதுக்குழு |
| (c) | 1932 | 3. | வங்காள பிரிவினை ரத்து செய்யப்பட்டது |
| (d) | 1942 | 4. | லக்னோ ஒப்பந்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

82. Who founded an organisation known as 'Rashtriya Swayam Sevak Sangha' to Unite Hindus?

(A) B. Hedgewar
(B) Santi Ghosh
(C) Kalpana Datta
(D) Suniti Chowdhary

இந்துக்களை இணைக்க "ராஷ்ட்ரீய சுவம் சேவக்" என்ற அமைப்பை ஆரம்பித்தவர் யார்?

(A) B. ஹெட்ஜ்வார்
(B) சாந்தி கோஷ்
(C) கல்பனா தத்தா
(D) சுனிதி சவுதாரி

83. If $x : y = 5 : 2$ then $(8x + 9y) : (8x + 2y)$ is

(A) 22 : 29

(B) 26 : 61

(C) 29 : 22

(D) 61 : 26

$x : y = 5 : 2$ எனில் $(8x + 9y) : (8x + 2y)$ என்பது

(A) 22 : 29

(B) 26 : 61

(C) 29 : 22

(D) 61 : 26

84. The value of $\frac{(835 + 378)^2 + (835 - 378)^2}{(835 \times 835) + (378 \times 378)}$ is

(A) 4

(B) 1

(C) 2

(D) 5

$\frac{(835 + 378)^2 + (835 - 378)^2}{(835 \times 835) + (378 \times 378)}$ என்பதன் மதிப்பு

(A) 4

(B) 1

(C) 2

(D) 5

85. If $A : B : C = 2 : 3 : 4$ then $\frac{A}{B} : \frac{B}{C} : \frac{C}{A}$ is equal to

(A) 8 : 9 : 24

(B) 9 : 24 : 8

(C) 4 : 6 : 9

(D) 5 : 9 : 6

$A : B : C = 2 : 3 : 4$ எனில் $\frac{A}{B} : \frac{B}{C} : \frac{C}{A} =$

(A) 8 : 9 : 24

(B) 9 : 24 : 8

(C) 4 : 6 : 9

(D) 5 : 9 : 6

86. If $\frac{a}{b} = \frac{4}{5}$ and $\frac{b}{c} = \frac{15}{16}$ then $\frac{c^2 - a^2}{c^2 + a^2}$ is

(A) $\frac{1}{\sqrt{7}}$

(B) $\frac{2}{\sqrt{3}}$

(C) $\frac{7}{25}$

(D) $\frac{5}{7}$

$\frac{a}{b} = \frac{4}{5}$ மற்றும் $\frac{b}{c} = \frac{15}{16}$ எனில் $\frac{c^2 - a^2}{c^2 + a^2}$ -ன் மதிப்பு

(A) $\frac{1}{\sqrt{7}}$

(B) $\frac{2}{\sqrt{3}}$

(C) $\frac{7}{25}$

(D) $\frac{5}{7}$

87. If $\sqrt{\frac{x}{169}} = \frac{54}{39}$, the value of $x$ is

(A) 108

(B) 324

(C) 2916

(D) 4800

$\sqrt{\frac{x}{169}} = \frac{54}{39}$ எனில் $x$ -ன் மதிப்பு

(A) 108

(B) 324

(C) 2916

(D) 4800

88. In a row of students, the place of Rahul from right is 12th and from left is 4th. How many students should be added to make the total number of students 28?

(A) 14

(B) 13

(C) 20

(D) 18

கிடை வரிசையில் அமர்ந்துள்ள மாணவர்களில் ராகுல் அமர்ந்துள்ள இடம் வலதுபுறமிருந்து 12-வதாகவும் இடதுபுறமிருந்து 4-வதாகவும் உள்ளது. எத்தனை மாணவர்களை சேர்த்தால் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 28-ஆக இருக்கும்?

(A) 14

(B) 13

(C) 20

(D) 18

89. If $\frac{x}{2y} = \frac{6}{7}$ then the value of $\frac{x-y}{x+y} + \frac{14}{19}$ is

(A) $-1$

(B) 1

(C) $\frac{2}{7}$

(D) $1\frac{1}{18}$

$\frac{x}{2y} = \frac{6}{7}$ எனில் $\frac{x-y}{x+y} + \frac{14}{19}$ -ன் மதிப்பு?

(A) $-1$

(B) 1

(C) $\frac{2}{7}$

(D) $1\frac{1}{18}$

90. The difference between compound interest and simple interest on an amount of Rs. 15,000 for 2 years is Rs. 96, then the rate of interest per annum is

(A) 12

(B) 8

(C) 6

(D) 10

ரூ. 15,000-க்கு 2 வருடங்களுக்கு கிடைக்கும் கூட்டு வட்டிக்கும், தனி வட்டிக்கும் உள்ள வேறுபாடு ரூ. 96 எனில், வட்டி வீதம் ஆண்டுக்கு

(A) 12

(B) 8

(C) 6

(D) 10

91. The C.I. on a sum of money for 2 years at 10% is Rs. 168. Find the simple interest.

(A) Rs. 150

(B) Rs. 158

(C) Rs. 160

(D) Rs. 164

ஒரு தொகைக்கு 2 வருடங்களுக்கு 10% கூட்டு வட்டியில் ரூ. 168 கிடைக்கிறது எனில் அதன் தனித்த வட்டியைக் காண்க.

(A) ரூ. 150

(B) ரூ. 158

(C) ரூ. 160

(D) ரூ. 164

92. Which among the following is the different from the others?

(A) Water–oxygen

(B) Death–disease

(C) Wine–grapes

(D) Butter–Milk

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மற்றதை விட வித்தியாசமானது?

(A) தண்ணீர்–ஆக்ஸிஜன்

(B) இறப்பு–நோய்

(C) மது–திராட்சை

(D) வெண்ணெய்–பால்

93. Insert the missing number :

1, 8, 27, 64, 125, 216, ———.

(A) 343

(B) 341

(C) 431

(D) 215

பின்வரும் எண்களில் விடுபட்ட எண்ணை காண்க :

1, 8, 27, 64, 125, 216, ———.

(A) 343

(B) 341

(C) 431

(D) 215

94. What is the volume of a cube whose diagonal measure is $4\sqrt{3}$ cm?

(A) 30 $cm^3$

(B) 46 $cm^3$

(C) 60 $cm^3$

(D) 64 $cm^3$

$4\sqrt{3}$ செ.மீ. மூலைவிட்டம் கொண்ட கனச் சதுரத்தின் கன அளவு

(A) 30 செ.மீ.$^3$

(B) 46 செ.மீ.$^3$

(C) 60 செ.மீ.$^3$

(D) 64 செ.மீ.$^3$

95. —————— is a system program whose job is to control all the computer resources and provide a base upon which the application programs can be written

(A) Application (B) Package

(C) Java (D) OS

கணினி வளங்களை கட்டுப்படுத்தவும் பயன்பாட்டு மென்பொருட்களை எழுதுவதற்கு அடித்தளமாகவும் அமையும் முறைமை மென்பொருள் —————— ஆகும்.

(A) பயன்பாடு (B) தொகுப்பு

(C) ஜாவா (D) ஓஎஸ்

96. —————— is data that has been summarized or otherwise manipulated for use in decision making.

(A) Facts (B) Source data

(C) Image data (D) Information

முடிவுகளை எடுப்பதற்காக தரவுகளை சுருக்கியோ அல்லது மாற்றியோ உபயோகப்படுத்தும் தரவு —————— ஆகும்.

(A) நிகழ்பாடுகள் (B) மூல தரவு

(C) பட தரவு (D) தகவல்

97. —————— is the study of how to create safety, comfort and ease of use for people who use machines.

(A) Ergonomics (B) Industry Commerce

(C) DSS (D) CII

இயந்திரங்களை பயன்படுத்தக் கூடிய மக்களின் பாதுகாப்பு, வசதி மற்றும் எளிதாக பயன்படுத்தும் விதத்தை பற்றிய படிப்பு —————— ஆகும்.

(A) தொழிற் சூழலியல் (B) தொழில் வணிகவியல்

(C) டிஎஸ்எஸ் (D) சிஐஐ

98. The LCM of two numbers is 495 and their HCF is 5. If the sum of the two numbers is 100, then find the difference of the two numbers

(A) 10
(B) 46
(C) 70
(D) 90

இரு எண்களின் மீ.சி.ம. 495 மற்றும் மீ.பெ.வ. 5 எனும்போது அவ்விரு எண்களின் கூடுதல் 100 எனில் அவ்விரு எண்களின் வித்தியாசம் என்ன?

(A) 10
(B) 46
(C) 70
(D) 90

99. Mauna Loa in Hawai island is the largest

(A) Active Volcano
(B) Dormant Volcano
(C) Extinct Volcano
(D) Dead Volcano

ஹவாய்த் தீவில் உள்ள மோனலோ என்பது மிகப்பெரிய

(A) செயல்படும் எரிமலை
(B) உறங்கும் எரிமலை
(C) அழிந்த எரிமலை
(D) உயிரற்ற எரிமலை

100. The Wildlife Crime Control Bureau (WCCB) was constituted under the wildlife protection act in the year

(A) 2006
(B) 2007
(C) 2008
(D) 2009

வன விலங்கு வதை தடுப்பு கழகம் (WCCB) ———————— ஆண்டில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் படி அமைக்கப்பட்டது.

(A) 2006
(B) 2007
(C) 2008
(D) 2009

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

**LTGS/16**

*Register Number* | | | | | | | | | |

# 2016
# GENERAL STUDIES
# (Degree Standard)

**Time Allowed : 2 Hours]** **[Maximum Marks : 200**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the questions.
2. This Question Booklet contains **100** questions. Prior to attempting to answer the candidates are requested to check whether **all** the questions are there and ensure there are no blank pages in the question booklet. In case any defect in the Question Paper is noticed it shall be reported to the Invigilator within first 10 minutes.
3. Answer **all** questions. **All** questions carry equal marks.
4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
5. You will also encode your Register Number, Subject Code, Question Booklet Sl. No. etc. with Blue or Black ink Ball point pen in the space provided on the side 2 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information, action will be taken as per Commission's notification.
6. Each question comprises *four* responses (A), (B), (C) and (D). You are to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the Answer Sheet.
7. In the Answer Sheet there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE circle of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. *e.g.* If for any item, Ⓑ is the correct answer, you have to mark as follows :

   Ⓐ ● Ⓒ Ⓓ
8. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
9. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
10. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide at their discretion.
11. In all matters and in cases of doubt, the English Version is final.
12. Do not tick-mark or mark the answers in the Question Booklet.

SEAL